# பகுதி 02

## சாத்தியமான பொதுவான வினாக்கள்

| இல. | கேள்வி | பதில் |
|---|---|---|
| 1. | பல்கலைக்கழக அனுமதிக்கு இணையதளத்தினூடாக விண்ணப்பித்தல் ஏன் கட்டாயமானது? | அது காகித விண்ணப்பங்களில் விரயமாக்கப்படும் நேரத்தை குறைப்பதோடு விரைவாக வெட்டுப்புள்ளியினை வெளியிடவும் உதவும். இணையதள விண்ணப்பங்களினது பாதுகாப்பு,நேர்த்தி ப.மா.ஆ வின் பொறுப்பாகும். |
| 2. | இலத்திரனியல் விண்ணப்பத்தினைப் பு'ர்த்திசெய்வதற்கான அறிவுறுத்தல்களை நான் எவ்வாறு பெற்றுக்கொள்வது? | தேவையான அறிவுறுத்தல்கள் அனைத்தும் பல்கலைக்கழக அனுமதிகள் கைநூலின் **பகுதி 5ல்** தரப்பட்டுள்ளது.<br>அத்துடன் இலத்திரனியல் விண்ணப்பத்தில் காணப்படும் குறியீட்டிற்கு சுட்டியை (Cursor) ஐ நகர்த்துவதன் மூலமும் விண்ணப்பத்தைப் பு'ர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல்களைப் பெறலாம்.<br>அத்துடன் தகவல் தொழிநுட்ப நிலையத்துடன் (1919) தொடர்புகொண்டும் தகவல்களைப் பெறலாம். |
| 3. | இலத்திரனியல் விண்ணப்பத்தினைப் பு'ர்த்திசெய்வதற்கு முன் தயார்செய்ய வேண்டியவை யாவை? | உங்களுக்கு தேவைப்படுபவை :<br>• 2016, க.பொ.த(உ/த) பரீட்சைக்கு பயன்படுத்திய தேசிய அடையாள அட்டை (NIC)<br>• தேசிய அடையாள அட்டையின் இரு பக்கங்களும் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதி(உறுதிப்படுத்தப்பட்ட புகைப்படம் ஒன்றினை மானவர் பயன்படுத்தி இருப்பின், அடையாளத்தை உறுதிப்படுத்தும் சத்தியவோலை ஒன்றினை உறுதிப்படுத்தப்பட்ட புகைப்படத்திற்கு பதிலாக பதிவேற்றல் வேண்டும்.)<br>• மின்னஞ்சல் முகவரி<br>• கையடக்க தொலைபேசி (தொலைபேசி இலக்கம் உமது தந்தையின்/தாயின்/பாதுகாவலரின் அல்லது உமக்கு நெருக்கமானவரின் தொலைபேசி இலக்கமாக இருக்கலாம்) |
| 4. | எந்தவொரு நபரும் இந்த இலத்திரனியல் இந்த சேவையைப் பயன்படுத்த முடியுமா? | 2016 ஆம் ஆண்டு க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஆகக் குறைந்தது மூன்று “S” சித்திகளைப் பெற்ற பரீட்சார்த்திகள் மாத்திரம் விண்ணப்பிக்கலாம். |
| 5. | இலத்திரனியல் சேவையைப் பயன்படுத்தி பதிவுசெய்ய முடியாதவர்கள் யார்? | • தேசிய அடையாள அட்டையைப் பயன்படுத்தாது கடவுச்சீட்டு அல்லது அத்தாட்சிப்படுத்தப்பட்ட புகைப்படத்தினைப் பயன்படுத்தி க.பொ.த. (உ/த) பரீட்சைக்குத் தோற்றியவர்கள்.<br>• விண்ணப்பிக்கும்பொழுது தேசிய அடையாள அட்டை இல்லாத விண்ணப்பதாரிகள்.<br>• அனுமதிக் கையேட்டின் பிரிவு 1.7 இல் குறிப்பிடப்பட்டுள்ள உயர் கல்வி நிறுவனங்களில் உள்வாரி மாணவர்களாக பதிவு செய்த அல்லது பதிவுசெய்துள்ள மாணவர்கள். |
| 6. | இலத்திரனியல் விண்ணப்பத்தை தமிழ் அல்லது சிங்கள மொழியில் பு'ர்த்தி செய்ய முடியுமா? | முடியாது. இலத்திரனியல் விண்ணப்பம் ஆங்கில மொழியில் மட்டுமே பு'ர்த்தி செய்யப்படல் வேண்டும். |
| 7. | பதிவுசெய்தலும் விண்ணப்பத்தை நிரப்பி சமர்ப்பித்தலும் ஒரே நேரத்தில் நடைபெற வேண்டுமா? | இல்லை. பதிவு செய்வதற்கான படிமுறைகளை முதலில் பு'ர்த்திசெய்யலாம். நீங்கள் விரும்பின் பின்னர் விண்ணப்பத்தை நிரப்பி சமர்ப்பிக்கலாம். |
| 8. | விண்ணப்பத்தை நிரப்பும்போது நான்கு படிமுறைகளையும் ஒரே நேரத்தில் நிரப்புதல் வேண்டுமா? | இல்லை. எந்தவொரு படிமுறையிலும் சேமித்துவிட்டு நீங்கள் வெளியேறலாம். பின்னர் நீங்கள் வெளியேறிய படிமுறையிலிருந்து தொடரலாம். |

| | | |
|---|---|---|
| 9. | மின்னஞ்சலினை பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது. நான் என்ன செய்வது? | உமது ஸ்பேம்/ ஜங் (spam/junk) அடைவினை பரீட்சிக்குக. |
| 10. | கையடக்க தொலைபேசிக்கு பதிலாக CDMA தொலைபேசியைப் பயன்படுத்தி குறுஞ்செய்தி குறியீட்டைப் பெற்றுக்கொள்ள முடியுமா? | இல்லை. கையடக்கத் தொலைபேசியை மட்டுமே பயன்படுத்தலாம். |
| 11. | நான் verification இணைப்பினைப் பெற்றுக்கொள்ளவில்லை. நான் verification இணைப்பினைப் பெற்றுக்கொள்வது எப்படி? | முகப்பக்கத்தில் உள்ள "உள்நுழைய இங்கே அழுத்தவும்" எனும் தெரிவை அழுத்தவும். அப்பொழுது "மீளுருவாக்கல்" எனும் தெரிவை நீங்கள் பார்க்கமுடியும். அத்தெரிவை அழுத்துவதன் மூலம் verification இணைப்பினைப் பெற்றுக்கொள்வீர்கள்.<br><br><br>அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும். அப்பொழுது நீங்கள் மீண்டும் verification link இனையும் குறுஞ்செய்தி ஊடாக செயற்படுத்தல் குறியீட்டினையும் பெறுவீர்கள். பின் நீங்கள் புதிய verification link இனையும் செயற்படுத்தல் குறியீட்டையும் பயன்படுத்தி உமது கணக்கினை செயற்படுத்திக்கொள்ள முடியும். |
| 12. | நான் குறுஞ்செய்தி குறியீட்டைப் (SMS Code) பெற்றுக்கொள்ளவில்லை. | முகப்பக்கத்தில் உள்நுழைவதற்கான தெரிவை அழுத்தவும். பின் "மீளுருவாக்கல்" தெரிவை அழுத்துவதன் மூலம் குறுஞ்செய்தி குறியீட்டை மீள உருவாக்கிக்கொள்ளவும்.<br><br>நீங்கள் verification இணைப்பினையும் குறுஞ்செய்தி குறியீட்டையும் மறுபடி பெறுவீர்கள். அடுத்து நீங்கள் புதிய இணைப்பினையும் புதிய குறுஞ்செய்தி குறியீட்டையும் பயன்படுத்தி உங்கள் கணக்கை செயற்படுத்தலாம். |

<table>
<tr><td>13.</td><td>“மீளுருவாக்கல்” தெரிவை பயன்படுத்தி மீளுருவாக்கல் verification இணைப்பினை அல்லது குறுஞ்செய்தி குறியீட்டை எவ்வாறு பெற்றுக்கொள்வது?</td><td>முகப்பக்கத்தில் உள்நுழைவதற்கான தெரிவை அழுத்தவும். “மீளுருவாக்கல்” எனும் தெரிவை நீங்கள் பார்க்கமுடியும்.<br><br><br>“மீளுருவாக்கல்” தெரிவை அழுத்தி தங்களது தேசிய அடையாள அட்டை இலக்கத்தினை பதிவுசெய்து சமர்ப்பிக்கவும்.<br><br>அடுத்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் தங்களின் பதிவினை மேற்கொள்ளும்போது தங்களால் பதிவுசெய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரியிலுள்ள “@” குறியீட்டிற்கு முன் வருகின்ற எழுத்துக்களையும் (abc@yahoo.com) அத்துடன் தொலைபேசி இலகத்தினுடைய இறுதி நான்கு இலக்கங்களையும் (077***1596) பதிவு செய்யவும்.<br><br><br>அடுத்து தங்களின் மின்னஞ்சல் முகவரியினூடாக “verification link ” ஐயும் மற்றும் கையடக்கத்தொலைபேசியினூடாக “செயற்படுத்தல் குறியீட்டினையும்” (Activation Code) ஐயும் பெறுவீர்கள்.</td></tr>
<tr><td>14.</td><td>இலத்திரனியல் சேவையினுள் என்னால் உள்நுழைய முடியவில்லை. “தவறான தேசிய அடையாள அட்டை இலக்கம்” எனும் செய்தி தோன்றுகின்றது.</td><td>தங்ளது தேசிய அடையாள அட்டை இலக்கம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் இலத்திரனில் சேவையில் பதிவு செய்யப்படவில்லை என்பதைக் குறிக்கின்றது. இலத்திரனில் சேவையில் உள்நுழவதற்கு முன்பாக தாங்கள் முதலில் பதிவுசெய்து கொள்ள வேண்டும்.<br><br>முகப்பக்கத்தில் “பதிவு செய்வதற்கு இங்கே அழுத்தவும்” எனும் தெரிவை அழுத்தவும்.</td></tr>
<tr><td>15.</td><td>என்னால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் இலத்திரனியல் சேவைக்கான கடவுச்சொல்லை ஞாபகம் வைத்திருக்க முடியவில்லை.</td><td>முகப்பக்கத்தில் “உள்நுழைவதற்கு இங்கே அழுத்தவும்” தெரிவை அழுத்தவும். இப்பொழுது தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் கடவுச்சொல்லை பதிவதற்கான பகுதியைக் காணலாம்.</td></tr>
</table>




இப்பொழுது நீங்கள் "கடவுச்சொல்லை மறந்துவிட்டீரா" எனும் தெரிவை பார்க்கமுடியும். "கடவுச்சொல்லை மறந்துவிட்டீரா" எனும் தெரிவை அழுத்தி தேசிய அடையாள அட்டை இலக்கத்தை பதிவுசெய்து சமர்ப்பிக்கவும்.

அடுத்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் தங்களின் பதிவினை மேற்கொள்ளும்போது தங்களால் பதிவுசெய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரியிலுள்ள "@" குறியீட்டிற்கு முன் வருகின்ற எழுத்துக்களையும் (**abc**@yahoo.com) அத்துடன் தொலைபேசி இலகத்தினுடைய இறுதி நான்கு இலக்கங்களையும் (077*****1596**) பதிவு செய்யவும்.




இப்பொழுது நீங்கள் தங்களின் மின்னஞ்சல் முகவரியினூடாக "கடவுச்சொல்லை மீள திருத்தியமைப்பதற்கான இணைப்பு"னையும் கைத்தொலைபேசியினூடாக "மறக்கப்பட்ட கடவுச்சொல் குறியீட்டினை"யும் பெறுவீர்கள்.

| | | |
|---|---|---|
| 16. | "கடவுச்சொல்லை மறந்துவிட்டீரா" எனும் தெரிவை பயன்படுத்தும் போது கடவுச்சொல்லை மீள மாற்றியமைக்க முடியாமலுள்ளது. ஏனெனில் "தகவல்கள் செயற்படுத்தப்படவில்லை" என்ற செய்தி தோன்றுகின்றது. தகவல்களை செயற்படுத்த நான் என்ன செய்ய முடியும்? | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் இலத்திரனியல் சேவையினால் தங்களின் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்பட்ட verification link ஐ அழுத்தவும்.<br><br>இணைப்பு இல்லையாயின் முகப்பக்கத்தில் உள்நுழைவதற்கான தெரிவை அழுத்தவும். அடுத்து "மீளஉருவாக்குதல்" தெரிவை நீங்கள் பார்க்கமுடியும். அந்த தெரிவை அழுத்துவதன் மூலம் verification இணைப்பினை நீங்கள் மீளுருவாக்கிக்கொள்ள முடியும். |
| 17. | தவறுதலாக பதிவுசெய்யப்பட்ட பெறுபேறுகள் அல்லது பாடசாலையை எவ்வாறு நீக்குவது? | அட்டவணையில் தோன்றும் பதிவுகளின் இறுதியில் காணப்படும் 'X' ஐகனை அழுத்தவும். |

| | | |
|---|---|---|
| 18. | உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளைப் பதிவுசெய்யும்போது நான் எதிர்ப்பாக்கும் பாடங்கள் தெரிவில் காணப்படவில்லை. நான் என்ன செய்ய முடியும்? | அத்தெரிவு "வரலாறு" சம்பந்தப்பட்ட பாடங்களாயின் நீங்கள் தோற்றிய பாடம் கீழே தரப்பட்டுள்ள மூன்று பாடங்களுள் இருக்கின்றதா என்பதைப் பார்க்கவும்.<br>25A - இந்திய வரலாறு<br>25B - ஐரோப்பிய வரலாறு<br>25C - History of Modern World<br>இப்பாடங்களில் ஒன்றை நீர் தெரிவுசெய்யின் "வரலாறு" எனும் தெரிவை தெரிவு செய்யலாம்.<br><br>இந்தப் பிரச்சினை "வரலாறு" சம்பந்தமாக இல்லாவிடின் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினைத் தொடர்பு கொள்ளவும். |
| 19. | எனது முன்னைய வருட பெறுபேறுகள் இலத்திரனியல் விண்ணப்பபடிவத்தில் தோன்றவில்லை | அந்த வருடம்/வருடங்களில் நீர் தகுதியற்ற பரீட்சார்த்தியாக இருக்க முடியும். அவ்வாறாயின் பரீட்சைக்கு தோற்றிய ஆண்டு மட்டுமே தோன்றும். மேலதிக தகவல்களுக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவை தொடர்புகொள்ளவும். |
| 20. | தரப்பட்ட நிரலில் எனது பாடசாலையின் பெயர் காணப்படவில்லை. எவ்வாறு எனது பாடசாலையின் பெயரை பதிவுசெய்வது? | பாடசாலையின் தகவல்களைக் குறிப்பிடாமல் விண்ணப்பத்தை பு'ர்த்தி செய்து, அச்சுப்பிரதி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் உமது பாடசாலையின் பெயரை எழுதவும். |
| 21. | கற்கைநெறி அல்லது பல்கலைக்கழக விருப்பொழுங்கில் நான் தெரிவுசெய்த ஒரு கற்கைநெறியை அல்லது பல்கலைக்கழகத்தை எவ்வாறு நீக்குவது? | நீக்க வேண்டிய கற்கைநெறி அல்லது பல்கலைக்கழகத்தின் மேல் கிளிக் செய்யவும். பின் "X" எனும் தெரிவை கிளிக் செய்யவும். |
| 22. | விண்ணப்பத்தை இருபக்கங்களிலும் அச்சுப்பிரதி செய்ய முடியுமா? | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு விண்ணப்பத்தை தனித்தனி பக்கங்கள் அச்சுப்பிரதி செய்யுமாறு சிபாரிசு செய்கின்றது. |
| 23. | எனது நண்பரின் விண்ணப்பத்தின் அச்சுப்பிரதிகளை விட எனது விண்ணப்பத்தின் அச்சுப்பிரதிகளில் பக்கங்கள் கூடுதலாக காணப்படுகின்றன. | இது கவலைப்பட வேண்டிய ஒரு பிரச்சினை அல்ல. ஒவ்வொரு விண்ணப்பதாரியினால் வழங்கப்படும் தகவல்களின் அடிப்படையில் பக்க எண்ணிக்கையில் மாற்றங்கள் ஏற்படலாம். |
| 24. | பாடசாலை விண்ணப்பதாரிகளினதும் தனிப்பட்ட விண்ணப்பதாரிகளினதும் பார்கோட்களில் வித்தியாசம் காணப்படுகிறதா? | ஆம். பாடசாலை விண்ணப்பதாரிகளை விட தனிப்பட்ட விண்ணப்பதாரிகளின் விண்ணப்பப்படிவத்தில் பார்கோடுகள் கூடுதலாக காணப்படும். |
| 25. | கற்கைநெறி அல்லது பல்கலைக்கழக விருப்பொழுங்கை எவ்வாறு மாற்றுவது? | விண்ணப்ப முடிவுத் திகதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் விருப்பொழுங்கை மாற்றலாம்.<br><br>இருப்பினும் நீங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு உங்கள் விண்ணப்பத்தினைச் சமர்ப்பித்த பின்னரே கற்கைநெறி அல்லது பல்கலைக்கழக விருப்பொழுங்கை மாற்றுவதற்கான தெரிவு செயற்படுத்தப்படும். |
| 26. | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுடன் எவ்வாறு தொடர்புகொள்வது? | 2016/2017 ஆம் ஆண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கான கைநூலின் பின் பக்கத்தில் தரப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்களைப் பயன்படுத்தி தொடர்புகொள்ள முடியும்.<br>தொ.பே: 011-2695301 / 011-2695302/011-2678731/011-2685758<br>பெக்ஸ் : 011-2691678 மின்னஞ்சல் : help@ugc.ac.lk |